முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 799**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

06.12.2021, திங்கட்கிழமை

1. தரணி காத்திட மாதவசியாக
தண்டாயுதன்என் சக்தியாக வந்த அரங்கனே
தரணியில் உன்அவதாரம் மெச்சி
தணிகாசலன் யான் ஞானஅறிவுரை ஆசிதன்னை
2. ஆசி தன்னை பிலவ தேள் திங்களில்
அரங்கன் நீ கேட்க அருளுவேன்
வாசிவென்ற ஞானிகள் படையெல்லாம்
வைகயத்தில் அரங்கன்உன்னை வரவேற்று வருக
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 20ம் நாள், 06.12.2021 திங்கட்கிழமை)
3. ஆசி தந்து நீ தருகின்ற மக்களெல்லாம்
அகிலத்தில் வாசியோக சித்தி பெறுவரப்பா
பெருமைபட அரங்கன் உன் கரம்பட தீட்சை பூவுலகில் பெற்ற மக்களுக்கே
வருமுலகில் ஞானிகளாகும் வாய்ப்பும் வள்ளல் பெருமான் வழி
4. வழி தன்னில் பெருஞானம் கூடி
வையகத்தை காக்கின்ற சக்தியும் யோகமும் கொண்டு சிறப்பர்
சிறக்கவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
சித்தி அருளுகின்ற மகா தவயோகி
5. மறுப்பின்றி அரங்கன் பாதம் பணிந்த
மக்களெல்லாம் மரணமில்லாத பெருவாழ்வு
பெருவாழ்வும் கண்டு சிறக்க நேரும்
பிரம்ம ஞானத்தையும் உணர்ந்து சித்தி காணக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–